தி.மு.க. வர்த்தகர் அணி

மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்! தேதி மாற்றம்

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

பிப்ரவரி 27 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தி.மு.க. வர்த்தகர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 28-02-2026 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் **"கலைஞர் அரங்கத்தில்"** எனது தலைமையில்:

வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் - வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் என். மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் - வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ்.அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த.வனராஜ், வி.பி.மணி, இ.ராமர், க.தனசெல்வம், பெ.சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ. சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ். சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன், பி.டி. செல்வகுமார், ஜெ. பாலகங்காதரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா:
2. சட்டப்பேரவைத் தேர்தலில் நமது அணியின் கோரிக்கைகள்
3. 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள்
4. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 24.02.2026

காசி முத்துமாணிக்கம்
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ந. திலிப்குமார் தலைமை!

கொளத்தூர் மேற்குப் பகுதியில் முதல்வர் பிறந்தநாள் மாபெரும் புகழரங்கம்!

வைகைப்புயல் வடிவேலு, நடிகர் நாசர், பேராசிரியர் பர்வீன் சுல்தானா புகழுரை!

சென்னை,பிப்.25-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கொளத்தூர் மேற்குப்பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா 14", நெஞ்சுரம் கொண்ட முதல்வர்! நிகரற்ற கொள்கை தலைவர்! எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் இன்று 25.2.2026, புதன்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, ஜி.கே.எம்.காலனி, அரிச்சந்திரா மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவில், கொளத்தூர் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ந.திலிப்குமார் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, எ.நாகராசன், ஐ.சி. எப்.வ.முரளிதரன், வானவில் விஜய், சி.மகேஷ்குமார், கே. சந்துரு, சரிதாமகேஷ்குமார், தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம. அ சோக்கமார், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, க.பிரசாத், முன்னிலை வகிக்கின்றனர்.

ஆர்.இளங்கோ, மு.தாவூத் உசேன், ஜீ.பிரபாகரன் (எ) பரத், ம.சரண்ராஜ், த.நிர்மல், தி.கணேஷ், அ.கிளை மேன்ட் சிரில், க.மோகன், அ.வினோத், ஜெ.ராஜப்பா, மு.சந்தானம், எஸ்.புவனேஷ், ரா.மணிகண்டன், ரா.விஜய், உ.விக்னேஷ், வி.டில்லிராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் - திரைக்கலைஞர். வைகைப்புயல் வடிவேலு, இயக்குர், திரைக்கலைஞர். நாசர், மதுரை உலகத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் பேராசிரியர்.பர்வீன் சுல்தானா ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

மேலும் இப்புகழரங்கத்தில், டாக்டர்.கலாநிதி விராசாமி எம்.பி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், இரா.கிரிராஜன் எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் Ex.MLA, இரா.விடுதலை, கே.எஸ்.இரவிசந்திரன், பி.கே.மூர்த்தி, தமிழன்பிரச்சனா, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கவிஞர்நன்மாறன், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்நாதன், என்.பி.எம்.ஷேக்ஆப்துல்லா, பரிதிஇளம்சுருதி, ஆர்.வரதன், வே.உமாகாந்த், செ.முருகன், தமிழ்செல்வன், என்.சௌந்தர்ராஜன், என்.பவுல்ராஜ், என். ராமச்சந்திரன், கோ.ஏகப்பன், ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, இசட்ஆசாத் எம்.சி. கூ.பிஜெயின் எம்.சி, ப.ஸ்ரீராலு எம்.சி, சொ.வேலு எம்.சி, டாக்டர். ஜி.சாந்தகுமார் எம்.சி. பகுதி கழக செயலாளர்கள்: செ. தமிழ்வேந்தன், எம்.சாமி கண்ணு, வே.வாசு, எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், வி.சுதாகர். பொதுக் குழு உறுப்பினர்கள்: கோ. மணி, டி.வி.செம்மொழி எம்.சி, வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, சாவித்திரிவீரராகவன், டாக்டர்.ஏபி.பூர்ணிமா எம்.சி, எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலாதேவி, இரா.கலைச்செல்வி. எல்.பி.எப்.மோகன், ஜி.தாமோதரன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி. பி.விஜயகுமார், எம்.விநாயகம், க. பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், எம்.தாவுத்பீ எம்.சி, யோகபிரியா தனசேகர் எம்.சி, பி.அமுதாபொன்னிவளவன் எம்.சி, சி.ஸ்ரீதணி எம்.சி. இரா. தயாளன், எம்.சாக்ரடீஸ். வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி, பி.பழனி, இளா. இளங்கோவன், எஸ்.கே. ரமேஷ், எல்.தாமஸ். எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி, என். சௌந்தர்ராஜன், என்.பவுல்ராஜ், என்.ராமச்சந்திரன், பி.ஊமைதுரை, பி.பொன்முடி, ஜெ.ஜார்ஜ்குமார், பி.டி.சி.ரவி, கே.பி.ஆதவன்மணி, ப.அன்பரசு, டி.சந்திரசேகர். அ.கன்னியப்பன், எம்.நாகராஜ், ஆர். மோகனசுந்தரம், டி.ஏ.ராஜன், ஆர்.ஆரோக்யிதாஸ்.எஸ்.சம்பத்குமார், ஜெ.சரவணன், என்.ரவிசந்திரன், ஆர்.சொக்கலிங்கம், எஸ்.நாகராஜன், ஏ. எம்.ராஜசேகர், ஆர்.ஜெ.வெங்கடமூர்த்தி, எஸ்.டி.பாஸ்கர், கோ.பொன்னிவளவன், சி.சந்திரசேகர், க.விஜயரங்கம், எஸ். முரளி, கே.சந்தானம், எம். துளசி, எஸ்.பி.சதீஷ்பாபு, வெங்கடேசன், ஜி.செல்வம், பொன்புகழேந்தி, புரசை. ஜி.ராமகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் எம்.டி.தமிழ்செல்வன் நன்றி கூறுகிறார்.

தி.மு.க மாணவர் அணி

மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

தி.மு.க மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிக்கை!

கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக்கூட்டம் வருகிற 26.02.2026 வியாழக்கிழமை காலை 12.00 மணி அளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் **மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன், ஆர். சுரேஷ்குமார்** முன்னிலையில் நடைபெற உள்ளது. கழக மாநிலத் துணைச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: **கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள், தமிழ் மாணவர் மன்றம், மாணவர் அணியின் அடுத்தகட்ட ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனை**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 23.02.2026

இரா.ராஜீவ்காந்தி
செயலாளர்,
கழக மாணவர் அணி

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி 36 வது வார்டில் குமரன் குன்றம் பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் குமரன் குன்றம் பிரசன்ன யோக ஆஞ்சநேயர் திருக்கோயிலிலும் பக்தர்கள் நிழற்குடை சட்டமன்ற உறுப்பினர் கருணாநிதி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 45 லட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்ட நிழற்குடைகளை இ. கருணாநிதி எம். எல்.ஏ தலைமையில் பக்தர்களின் பயன்பாட்டிற்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார். தாம்பரம் மாநகராட்சி ஆணையர் சீ. பாலச்சந்தர் துணை மேயர் கோ. காமராஜ் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் மாமன்ற உறுப்பினர் சரஸ்வதி சந்திரசேகர் திருக்கோயில்களின் நிர்வாகிகள் பொது நலச் சங்கங்களின் நிர்வாகிகள் பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்த கோடிகள் திரண்டிருந்து நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.

சென்னை தென்மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர்

மூத்த வழக்கறிஞர் எம்.ராஜதுரை மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 25 -

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராய நகர் மேற்கு பகுதி 132 'அ' வட்டக் கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் சென்னை தென்மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மறைந்த மூத்த வழக்கறிஞர் எம். ராஜதுரை அவர்கள் நேற்று முன் தினம் (23.2.2026) எண்.13 யுனைடெட் இந்தியா காலனி, அண்ணா மெயின் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 24 என்ற முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை மற்றும் ஏராளமான கழகத்தினர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மூத்த வழக்கறிஞர் எம்.ராஜதுரை மறைவு செய்திஅறிந்த தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! இராஜேஸ்வரி ஸ்ரீதர், எம்.சி தலைமை!

எழும்பூர் தெற்குப் பகுதியில், முதல்வர் பிறந்தநாள் மகளிர் கைப்பந்து போட்டி!

நடிகர் கிங்ஸ்லி, இந்திய கைப்பந்து வீரர் எம்.நவீன் ராஜா ஜேக்கப் பரிசுகள் வழங்குகின்றனர்!

சென்னை,பிப்.25-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், எழும்பூர் தெற்குப்பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு "மனிதநேய விழா 12", மகளிர் உலகை மகளிரே கையாளட்டும்! மாநிலம் உயர நம்மோடு களமாடட்டும்! எனும் தலைப்பில், மாபெரும் கைப்பந்து போட்டி 25.2.2026, புதன்கிழமை அன்று காலை 8.00 மணியளவில், சென்னை, கண்ணப்பர் திடல் மைதானத்தில் நடைபெறுகிறது.

இக்கைப்பந்து போட்டியில், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் திரு. தயாநிதிமாறன் எம்.பி, முன்னிலை வகிக்கின்றனர்.

கோ.ஏகப்பன், வி.சுதாகர், சொ.வேலு எம்.சி, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, ப.ஸ்ரீராமுலு, சரிதாமகேஷ்குமார், சுதாதீனதயாளன் எம்.சி, ஏ.நிர்மலாதேவி, கே.அண்ணபூரணி, கே.வள்ளி, ஆர்.கிருஷ்ணவேணி, எஸ்.விஜயலுட்ஷ்மி, கே.எம்.ஸ்நோபா, ஜெ.தேவகிருபை, எஸ்.ஜான்சிராணி, சகினாபேகம், சூர்யாரகு ஆமல்பாண்டியன், ஜெயசூர்யா, யு.இலக்கியா, எம். எழில், எஸ்.விஜயலஷ்மி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இவ்மகளிர் கைப்பந்து போட்டியை - திரைக்கலைஞர் கிங்ஸ்லி, இந்திய கைப்பந்து வீரர் M.நவீன் ராஜா ஜேக்கப் ஆகியோர் துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகின்றனர்.

மேலும் இக்கைப்பந்து போட்டியில், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, கே.எஸ்.இரவிச்சந்திரன்Ex.MLA, தமிழன்பிரசன்னா, பி.எம்.யாழினி, மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் ஆர்.பாபு, வி.விஜயகுமார் நன்றி கூறுகின்றனர்.

மக்களின் மாபெரும் எழுச்சிமிகு ஆதரவோடு

150 தொகுதிகளைக் கடந்த 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை!

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் வரலாற்று வெற்றியை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையானது பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் தமிழ்நாடு முழுக்க வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. திராவிடமாடல் அரசின் சரித்திர சாதனைகள் மற்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சகம் அதன் அடிமை கூட்டணியின் துரோகத்தை மக்கள் முன் எடுத்துரைக்கும் இப்பரப்புரைக் கூட்டத்தில் மக்கள் எழுச்சியோடு வந்து கலந்து கொண்டு ஆதரவு அளித்து வருகின்றனர். மக்களின் ஆதரவோடு 151 தொகுகளில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையானது வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது.

22.02.2026 அன்று எட்டு தொகுதிகளில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் குளச்சலில் இனிகோ இருதயராஜ், அணைக்கட்டில் ஆர்.எஸ் பாரதி , தூத்துக்குடியில் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், திருவிடைமருதூரில் சபாபதி மோகன், மாதவரத்தில் கனிமொழி சோமு, கள்ளக்குறிச்சியில் எழிலன் நாகநாதன் , கந்தர்வக்கோட்டையில் ஏ.கே.எஸ்.விஜயன் , முதுகுளத்தூரில் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு அனல் பறக்க பரப்புரை செய்தனர்.

ஆர்.எஸ்.பாரதி அவர்கள் பேசும் போது " திராவிட மாடல் அரசின் மகளிர் நல திட்டங்களை பட்டியலிட்டு பேசியவர், கலைஞர் ஆட்சியின்போது பெண்கள் முன்னேற்றத்திற்காக கொண்டு வந்த திட்டங்கள் மூலம் பெண்கள் காவல்துறை உயர் அதிகாரிகளாகவும், நீதிபதி களாகவும் உயர்ந்துள்ளனர் என்று குறிப்பிட்டார். மேலும் இந்த மாதம் முதலமைச்சர் அவர்களால் 1.31 கோடி பெண்களுக்கு கொடுக்கப்பட்ட 5000 ரூபாய் உரிமை தொகையைத் தடுக்க பா.ஜ.க. செய்த சதி வேலைகளையும் விளக்கி கூறினார். இப்படி நலத்திட்டங்களை தடுத்து நிறுத்த துடிக்கும் பா.ஜ.க.வுக்கு துணை போகும் அ.தி.மு.க.விற்கு யாரும் வாக்களிக்க கூடாது என்பதை அழுத்தம் திருத்தமாக பதிவு செய்தார்.

இனிகோ இருதயாராஜ் அவர்கள் பெண்களின் அன்றாட வாழ்விற்கு கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் எவ்வளவு முக்கியமாக இருக்கிறது என்பதை எடுத்துரைத்ததோடு, நமது முதலமைச்சர் கொண்டு வந்த காலை உணவுத் திட்டத்தை , கனடா பிரதமர் அவர்கள் அவரது நாட்டில் அதை செயல்படுத்தி உள்ளார் என திராவிட மாடல் அரசின் சாதனைகளின் வீச்சு பற்றி பேசினார். அதோடு கல்வி நிதியை நிறுத்தி, மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிக்கும் பா.ஜ.க.வை எதிர்க்கும் துணிச்சல் கொண்ட ஒரே தலைவர் நம் முடைய முதலமைச்சர்தான் என அழுத்தம் திருத்தமாக பேசினார்.

கள்ளக்குறிச்சியில் எழிலன் நாகநாதன் பேசுகையில் " முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த இட ஒதுக்கீடு என்ற ஏணிதான், என்னைப் போன்ற சாதாரணமானவர்களையும் மருத்துவர் ஆக்கியது. இதுதான் சமூக நீதிக்குச் சான்று. ஒரு காலத்தில் குனிந்து கைகட்டி நின்றவர்கள், இன்று தலைநிமிர்ந்து சமமாக நடக்கும் நிலையை திராவிட முன்னேற்ற கழகம் உருவாக்கியுள்ளது. சாதி, மத பேதமின்றி அனைவரும் ஒரே மேடையில் அமரும் 'சமத்துவ மேடையை' இந்த இயக்கம் வழங்கியுள்ளது என குறிப்பட்டவர் கள்ளக்குறிச்சி மக்கள் இம்முறை உதய சூரியன் பக்கம் அணிதிரண்டு விட்டார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் அவர்கள் சொன்னதை கூட செய்யவில்லைஉ ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் சொன்னதை மட்டுமல்லாமல் சொல்லாத பல நலத் திட்டங்களையும் நிறைவேற்றிக் காட்டியுள்ளார் முதலமைச்சர் அவர்கள். ஆகவே 2026 இலும் மக்களுக்கான திராவிடமாடல் அரசை அரியணை ஏற்றுவோம் என சூளுரைத்தார்.

மாதவரம் தொகுதியில் திருமதி.கனிமொழி சோமு அவர்கள் " தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் 9 முறை ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டைத் தாக்கல் செய்தும், தமிழகத்திற்கு ஒதுக்கியது 'பூஜ்யம்' தான். நாம் கொண்டு வந்த 'தோழிகள் விடுதி' போன்ற திட்டங்களை மட்டும் நகலெடுத்துக் கொள்கிறார்கள், ஆனால் நிதி என்று வரும்போது தமிழகத்தைப் புறக்கணிக்கிறார்கள். பீகார் வெள்ளத்திற்கு நிவாரண நிதியை வாரி வழங்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாடு வெள்ளத்தால் தத்தளித்தபோது ஒரு பைசா கூட தராமல் வஞ்சித்தது, அதற்கு அ.தி.மு.க. துணைபோன மிகப்பெரிய துரோகம். ஒன்றிய அரசுத் தேர்வுகளில் வட இந்தியர்களுக்கே முன்னுரிமை அளித்து, தென்னிந்தியர்களையும் சிறுபான்மையினரையும், தமிழ் நாட்டு மக்களையும் திட்டமிட்டுப் புறக்கணிக்கிறார்கள் என ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஓரவஞ்சனையை மக்கள் முன் வெளிச்சம் போட்டு காட்டினார்.

சபாபதி மோகன் அவர்கள் " இங்கிலாந்து பிரதமர் ஸ்டார்மரே நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த காலை உணவுத் திட்டத்தை வியந்து குறிப்பட்டதை எடுத்துரைத்து "Stalin is firing on all cylinders" என ஆங்கில ஊடகங்கள் முதலமைச்சரை பாராட்டியதையும் குறிப்பிட்டு பேசினார். வருகின்ற மே மாதத்திலிருந்து 1.31 கோடி குடும்பத்தலைவிகள் கணக்கிலும் 2000 வரப்போகிறது என அவர் குறிப்பிட கூட்டத்தில் திரண்டிருந்த பெண்கள் கரவொலி எழுப்பி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இவ்வாறு தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை நடைபெறும் அனைத்து தொகுதிகளிலும் தமிழ்நாட்டு மக்கள் உற்சாகமாக கலந்து கொண்டு பேராதரவளித்து வருகின்றனர்.